மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

E.A. No. 3/2019

in

E.P. No. 10/2019

in

O.S.No. 156/2017

மா.சா.6

தேதி : 2.02.2023.

பெயர் : அரிஸ்ராஜாசிங்

1873 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10 வது பிரிவின் படி 2023 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2 ம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரப்பெற்றதும் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் பழையகாயலில் இளநிலை மின் பொறியாளராக இருக்கிறேன். நான் கொண்டுள்ள வந்துள்ள ஆவணத்தில் 38500430 மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் தற்போது மின் இணைப்பு உபயேகத்தில் இல்லை. 26.05.1964 ல் D. நாராயணன் அவர்கள் பெயரில் வழங்கப்பட்டது. மின இணைப்பு எந்த தெருவில் உள்ளது என்றால் வடக்கு தெருவில் உள்ளது. மின் இணைப்பு வழங்கப்பட்ட வீட்டிற்கு கதவு எண் உள்ளதா என்றால் கணினி படி இல்லை. கதவு எண் இருந்தால் தான் மின் இணைப்பு கொடுப்போம் என்றால் சரிதான். வீட்டு தீர்வையும் இருந்தால் தான் கொடுப்போம். மின் இணைப்பு யார் கேட்டு விண்ணபித்தார் என்ற விபரங்கள் என் ஆவணங்களில் துலங்குமா என்றால் கணினி படி ஆவணங்கள் எதுவும் இல்லை.

கணினிக்கு முன் உள்ள ஆவணங்கள் எங்கு இருக்கும் என்றால் கணினியில் பதிவேற்றம் செய்தபின் பழைய ஆவணங்கள் இருக்காது. மேற்படி மின் இணைப்பிற்கு 29.12.2015 ல் கடைசியாக மின் கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளது. அந்த விபரங்கள் எனது ஆவணங்களில் துலங்கும். 29.12.2015 க்கு பிறகு மின் கட்டணம் செலுத்தாததால் அந்த இணைப்பு துண்டிக்கபட்டு அவருடைய கணக்கு முடிக்கப்பட்டது. 26.12.2022 ல் இருந்து நான் பழையகாயலில் வேலை செய்கிறேன். மின் இணைப்பை துண்டித்தது நான் கிடையாது என்றால் சரிதான். மின் இணைப்பை மீண்டும் புதுப்பிக்கலமா என்றால் வீட்டுதீர்வை காண்பித்து தற்போது உரிமையாளர் பெயரில் புதிதாக விண்ணபம் செய்து மின் இணைப்பை மீண்டும் பெறலாம். நான்

கொண்டு வந்துள்ள ஆவணம் கணினியில் இருந்த பதிவிறக்கம் செய்யப்பட்டது. நான் கொண்டுவந்துள்ள Consumer LT Billing மின் இணைப்பு விபரப்பட்டியல் சா.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

மின் இணைப்பு எண் 38500430 ஆகும். மின் இணைப்பு வழகங்குவதற்கு என்ன என்ன ஆவணங்கள் கொடுத்தார்கள் என்று நான் கொண்டு வந்துள்ள ஆவணத்தில் துலங்காது என்றால் சரிதான். எதன் அடிப்படையில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது என்ற விபரம் நான் கொண்டு வந்துள்ள ஆவணத்தில் துலங்காது என்றால் சரிதான். மின் இணைப்பிற்குரிய நாராயணனின் தகப்பனார் பெயர் என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். பொதுவாக வீட்டை புதுப்பிக்க வேண்டும் என்றால் மனு கொடுத்து தற்காலிகமாக 6 மாத காலத்திற்குள் மின் இணைப்பு துண்டிக்க சொல்வார்கள் என்றால் சரிதான். எதன் அடிப்படையில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது என்றால் அந்த விபரங்கள் நான் கொண்டு வந்துள்ள ஆவணத்தில் துலங்காது. துண்டிப்பதற்கு யார் மனு கொடுத்தார் என்ற விபரமும் இதில் துலங்காது என்றால் சரிதான். மின் இணைப்பு சம்மந்தமாக வேறு கோப்புகள் எதுவும் எங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால் இல்லை. இந்த மின் இணைப்பு மின் கட்டணம் செலுத்தாததால் துண்டிக்கப்படவில்லை என்றால் 6 மாத காலம் தற்காலிகமாக மின் இணைப்பை துண்டிப்பதற்கு மனு செய்தபின் 6 மாதம் காலம் கடந்தும் விண்ணப்பம் செய்து பணம் கட்டாததால் துண்டிக்கப்பட்டது. மின் இணைப்பை துண்டிக்க மனு கொடுத்தது இந்த மனுதார் சிவசுப்பிரமணியன் என்றால் சரியல்ல. அவர் கொடுத்த மனு அலுவலகத்தில் உள்ளது என்றாலும் வேண்டுமென்றே நான் கொண்டுவரவில்லை என்றாலும் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளகூடியதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒ/ம்–சா.முத்துலெட்சுமி, பி.ஏ.,எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஸ்ரீவைகுண்டம்.